செய்தி வெளியீடு எண்: 520 நாள்: 10.03.2024

<u>செய்தி வெளியீடு</u>

**தமிழ்நாடு டாக்டர் ஜெ ஜெயலலிதா இசை மற்றும் கவின்கலைப் பல்கலைக்கழகத்திற்கு ரூ.14.85 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள புதிய கட்டடம் – மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்தார்.**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் 8.3.2024 அன்று தலைமைச் செயலகத்தில், சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறையின் சார்பில் சென்னை, இராஜா அண்ணாமலைபுரம், அரசு இசைக் கல்லூரி வளாகத்தில் செயல்பட்டு வரும் தமிழ்நாடு டாக்டர் ஜெ ஜெயலலிதா இசை மற்றும் கவின்கலைப் பல்கலைக்கழகத்திற்கு தரை மற்றும் நான்கு தளங்களுடன் 14 கோடியே 85 இலட்சம் ரூபாய் செலவில் புதிதாக கட்டப்பட்டுள்ள கட்டடத்தை திறந்து வைத்தார்.

தமிழ்நாடு டாக்டர் ஜெ ஜெயலலிதா இசை மற்றும் கவின்கலைப் பல்கலைக்கழகத்தின் கீழ், சென்னை, மதுரை, கோவை மற்றும் திருவையாறு ஆகிய இடங்களில் உள்ள அரசு இசைக் கல்லூரிகள், சென்னை மற்றும் கும்பகோணத்தில் உள்ள அரசு கவின்கலைக் கல்லூரிகள், மகாபலிபுரத்தில் இயங்கும் அரசு கட்டடக்கலை மற்றும் சிற்பக்கலைக் கல்லூரி, மதுரை மற்றும் திருச்சியில் இரு சுயநிதி உதவி கல்லூரிகள், சென்னையில் உள்ள தமிழ்நாடு அரசு எம்.ஜி.ஆர் திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி நிறுவனம் மற்றும் 13 சுயநிதி கல்லூரிகள், என மொத்தம் 23 கல்லூரிகள் இணைவுப் பெற்றுள்ளன. மேற்குறிப்பிட்ட இணைவுப் பெற்ற கல்லூரிகளை தவிரவும் இப்பல்கலைக்கழகத்தின் கீழ் 20–ற்கும் மேற்பட்ட அங்கீகாரம் பெற்ற வெளிக்கல்வி வளாக (Off Campus) மையங்களும் இணைவுப் பெற்று செயல்பட்டு வருகின்றன.

இப்பல்கலைக்கழகம் தோற்றுவித்த ஆண்டு முதல் இதுநாள் வரை எந்த பல்கலைக்கழகத்திற்கும் இல்லாத சிறப்பாக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களை வேந்தராக கொண்டு செயல்பட்டு வருகிறது.

இப்பல்கலைக்கழகத்திற்கு சொந்த கட்டடம் இல்லாத நிலையில் தமிழ்நாடு அரசால் 14 கோடியே 85 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, தரை மற்றும் நான்கு தளங்களுடன், 45,800 சதுர அடி பரப்பளவில் நவீன வசதிகளுடன் புதிய கட்டடம் கட்டப்பட்டுள்ளது.

இப்புதிய கட்டடத்தில் முதுகலை பட்டப் படிப்பாக இசைத் துறையில் குரலிசை, வீணை, வயலின், மிருதங்கம், நாதஸ்வரம் மற்றும் பரதநாட்டிய படிப்புகளையும், கவின்கலையில் ஓவியம் மற்றும் காட்சிவழித் தகவல் தொடர்பு வடிவமைப்பு படிப்புகளையும், இசை மற்றும் கவின்கலைப் பிரிவுகளின் கீழ் ஆராய்ச்சி படிப்பு பயின்று வரும் மாணவ, மாணவியர்களுக்கான வகுப்பறைகள், நூலகம் மற்றும் மின்னணு நூலகம், நவீன வசதியுடன் கூடிய ஸ்டூடியோ அறை, செயல்முறை பயிற்சிக்கான கருவிகள் மற்றும் உபகரணங்கள், அலுவலர்கள், ஆசிரியர்கள், ஆசிரியரல்லா அலுவலகப் பணியாளர்களுக்கான அறைகள், நவீன வசதியுடன் கூடிய கூட்ட அரங்கு, ஆட்சிமன்றக் குழு கூட்ட அரங்கு, திரையரங்கம், ஆராய்ச்சி படிப்புகளுக்கான மையம் போன்ற பல்வேறு வசதிகளுடன் இக்கட்டடம் கட்டப்பட்டுள்ளது.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் திரு. மு.பெ. சாமிநாதன், கலை மற்றும் பண்பாட்டுத் துறை இயக்குநர் திரு. எஸ்.ஆர். காந்தி, தமிழ்நாடு டாக்டர் ஜெ ஜெயலலிதா இசை மற்றும் கவின்கலைப் பல்கலைக்கழக துணை வேந்தர் டாக்டர் சீ. சௌமியா, பதிவாளர் திருமதி சிவசௌந்தரவல்லி ஆகியோர் கலந்து கொண்டனர்.

............

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை-9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in